MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Mythical stories in Poomani's 'Anjnadi' novel

Dr. N. Rathinakumar[1], M. karthikesan[2]

Assistant Professor[1], Research Scholar[2], Department of Tamil, The Madura College, Madurai, India

Manuscript ID : **MT36A0073**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 11.10.2022
Revised: 20.10.2022
Accepted: 31.10.2022
Published: 04.11.2022

Pages : 25-39

DOI: 10.5281/zenodo.7372261

ABSTRACT:

Communities are made up of various collective unconscious ideas, stories, myths, religious myths and folk tales. Religions are based on various myths and legends. Each community has its own religions and stories told over time about the gods they believe in. These also operate on concepts that advance society. A society that completely excludes religions does not always exist. Rather those who oppose it are formed by themselves.

KEYWORDS:

Text, Myth, Discourse, Commentary, Collective Unconscious, Narrative

பூமணியின் ‘அஞ்ஞாடி’ நாவலில் தொன்மக் கதைகள்

முனைவர் ந. இரத்தினக்குமார்[1], ஆய்வாளர் மெ. கார்த்திகேசன்[2]
உதவிப் பேராசிரியர்[1], முனைவர் பட்ட ஆய்வாளர்[2]
தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சமூகங்கள் பல்வேறு கூட்டு நனவிலி சார்ந்த கருத்துக்களையும், கதைகளையும், புராணங்களையும், மதக் கடவுளர் கதைகளையும், கட்டுக் கதைகளையும், நாட்டுப்புறக் கதைகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. மதங்கள் பல்வேறு புராண, இதிகாசத் தொன்மங்களைத் தன்னகத்தே கொண்டு வளர்ச்சி பெறுகின்றனவாக உள்ளன. ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்கள் சார்ந்த சமயங்கள், நம்பும் கடவுள்கள் குறித்து காலங்காலமாகக் கூறப்பட்டு வருகின்ற கதைகள் இருக்கின்றன. சமூகத்தை முன்னகர்த்தும் கருத்தாக்கங்களில் இவையும் செயலாற்றுகின்றன. மதங்களை முற்றாகக் கழித்து விடுகிற சமூகம் என்ற ஒன்று எப்போதும் உருவாவதில்லை. மாறாக அதை எதிர்ப்பவர்களையும் தன்னகத்தே கொண்டு உருவாகின்றன.

கருச்சொற்கள்

பிரதி, தொன்மம், கதையாடல், எடுத்துரைப்பு, கூட்டு நனவிலி

முன்னுரை

வரலாற்றுத் தன்மை கொண்ட கதைகளிலிருந்து வேறுபட்டவையாக தொன்மைக் கதைகள் காணப்படுகின்றன. மக்களின் விருப்பங்கள் அடிப்படையில் அவை தோன்றுகின்றன எனக் கொள்ளலாம். அவை முழுவதும் புனைவாகக் கருதப்படக் கூடியவை. தொன்மக் கதைகள் காலந்தோறும் புதிய சூழலுக்கு ஏற்ப பொருள்படுத்தக் கூடியவையாக உள்ளன. பூமணியின் அஞ்ஞாடி, தமிழ் நாவல் வரலாற்றில் தனித்துவமாக அமைந்த ஒன்று. பல்வேறு தொன்மக் கதையாடல்களைத் தனக்குள் கதைக் கொத்தாகப் பொதிந்து அடுக்கிக்கொண்ட பிரதியாக இருப்பதை இக்கட்டுரைக் கவனப்படுத்துகிறது.

தொன்மம் - விளக்கம்

தொல் என்னும் சொல் பழமை என்னும் பொருள்படக் கூடியது. பழகிய ஒன்று எனவும் பழமையான ஒன்று எனவும் இதனைக் கொள்ளலாம். பழங்காலத்திலிருந்து வழிவழியாகக் கூறப்பட்டு வரும் கதைகளே தொன்மக் கதைகள் என்று கூறப்படுகின்றன. தொன்மம் என்பது அறிவியலுக்கு அப்பாற்பட்டு மக்களின்

வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள்ளது என்பதைக் காணமுடிகிறது. தொன்மை என்ற சொல்லினை வனப்பு என்பதின் ஒரு கூறாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

"தொன்மை தானே சொல்லுங்காலை
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே" (தொல்.பொருள்.549)

என்று குறிப்பிடுகிறது. உரையோடு பொருந்திய பழைய கதைப் பொருளாகக் கூறப்படுவதாகும் எனப்படுகிறது. இதிலிருந்து தொன்மை அல்லது தொன்மம் என்பது பழைய கதைப் பொருள் என்பது விளங்குகிறது. மக்களிடம் புழங்குகின்ற பல்வேறு கதைகளை தொன்மம் என்றே குறிப்பது வழக்கமாகும். புறநானூற்றில் தொன்மக் கதைகள் இருந்தமையைச் சுட்டும் ப. மருதநாயகம் வரலாற்றுக் கதைகளிலிருந்து தொன்மக் கதைகள் வேறுபட்டவை எனக் கூறுகிறார் "பழமரபுக் கதைகள் என்று நம்பப் பெறுபவை. அண்மைப் பழங்காலத்தைச் சேர்ந்தவை. மனிதரை கதைமாந்தராகக் கொண்டவை. இவ்வுலக நிகழ்ச்சிகளையே பேசுபவை. அவற்றில் தொன்மத்தை விட வரலாற்றுப் பின்புலம் அதிகம். இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் குறைவு, வனதேவதைக் கதைகள், தேவதைகளைக் கதைமாந்தராகக் கொண்டவை. அவற்றிற்கு வரலாற்றுப் பின்புலம் இல்லை. அவை உண்மையானவையென்றோ, புனிதத்தன்மை உடையவை என்றோ கருதப் பெறுவதில்லை. நாட்டார் கதைகள் எல்லாக் காலங்களிலும் எழக் கூடியவை. மனிதரோடு வேறு வகைப் பாத்திரங்களும் இவற்றுள் இடம்பெறும் இவை புனைவென்று அறியப்பட்டவை. புனிதத் தன்மை ஏற்றப்படாதவை. தனிமனிதனுக்குச் சிறப்பிடம் அளிப்பவை. இவற்றில் நீதி புகட்டும் நோக்கம் மிகுதி"[1] என்று குறிப்பிடுகிறார். அப்துல் ரகுமான் "வரலாற்றுப் பார்வையில் இராமாயணத்தைப் பார்த்தவர்களுக்கு அது தெற்கே ஆரிய நாகரிகம் பரவியதைக் குறிப்பது என்பர். சீதை என்ற சொல்லுக்கு உழவுசால் என்று பொருள் இருப்பதைக் காரணமாகக் காட்டி ஆரியர்கள் தெற்கேயிருந்த ஆதிவாசிகளிடமிருந்து உழவுத் தொழிலை மீட்க முனைந்ததையே இராமாயணம் குறிக்கிறது எனச் சிலர் கூறுவர்"[2] என்கிறார். இராமாயணக் கதைகள் வெவ்வேறு சமூகங்களில் வெவ்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன. ஒவ்வொரு சமூகமும் தனக்கேற்றாற் போல கதைகளை வடித்துக் கொள்கின்றன எனக் கொள்ளலாம்.

தொன்மங்கள் மக்களிடம் புழக்கத்தில் இருக்கின்ற சொல்வடைகள், சொல்கதைகள், பொழுதுபோக்குக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் எனப் பலவற்றிலும் இருக்கக் காண்கிறோம். தொன்மக் கதையென்று அழைக்கப்படுகின்ற கதைகள் குறித்து "உலகத்தின் தோற்றம் பற்றிய கதை, மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பது பற்றிய கதை, காதல் கதை, வெள்ளம், பஞ்சம் பற்றிய கதை, காடு, கடல் பற்றிய கதை, சாவைப் பற்றியக் கதை, மாபெரும் வீரர்கள் பற்றியக் கதை, பெரும் போர்கள் பற்றிய கதை, ஐம்பெரும் பூதங்கள் பற்றியக் கதை என்று உலக நாகரிகம் அனைத்திலும்

தோன்றியுள்ள கதைகளே தூய தொன்மங்கள் அல்லது ஆதிகாலத்துத் தொன்மங்கள் என அழைக்கின்றனர். பின்னால் தோன்றிய தொன்மங்களுக்கு அடிப்படையாக இத்தொன்மங்களை மானிடவியல் அறிஞர்கள் தங்கள் ஆய்விற்கு மூலப் பொருளாகக் கொள்கின்றனர். மேலும் நாட்டுப்புறக் கதைகள், நீதிக்கதைகள் (புத்த ஜாதகக் கதைகள் போல்வன), மாய தந்திரக் கதைகள் (விக்கிரமாதித்தன் கதைகள்), இதிகாசங்கள் (இராமாயணம், பாரதம்), புராணக் கதைகள் (திருவிளையாடல் புராணம், கந்த புராணம், பெரிய புரணம்) முதலியக் கதைகளும் சமூகத்தில் நிலவுகின்றன"[3] என்று குறிப்பிடுகிறார் க. பஞ்சாங்கம்.

பழமரபுக் கதைகள்

பண்பாட்டு மரபில் மக்களிடம் வாழ்வியல் சார்ந்த பல்வேறு கதைகள் பழமரபுக் கதைகளாக கூறப்பட்டு வருகின்றன. அவை நிலம், நீர், தாவரம், விலங்குகள் ஆகியனவற்றைப் பற்றிய கதைகளாகக் காணப்படக் கூடும் இயற்கை சார்ந்த ஒவ்வொன்றோடும் தன்னை இணைத்துக் கொள்ளும் கதைகளாக இவை அமைகின்றன. நீர் பற்றிய கதைகளில் நீர் நிலைகளைக் கைப்பற்றுதல், அதனைப் பயன்படுத்துதல் என்பன பற்றிய கதைகளும், நீரில் உலவும் பல்வேறு இயற்கை இகந்த சக்திகள் பற்றியுமான கதைகள் கூறப்படுகின்றன. இவ்வாறு நிலம் சார்ந்தும் நிலத்தின் தன்மை, மரங்கள், மரங்களில் உறையும் தெய்வம், பேய் ஆகியன பற்றியக் கதைகள், விலங்குகளின் குணாதிசயங்கள், அவை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நுண்ணுணர்வினை அறியும் தன்மையுடையவை என்னும் கதைகள் ஆகியன கதைகளில் பழமரபுக் கதைகளாக வெளிப்படுகின்றன.

கதையாடல்களும் தொன்மமும்

தொடக்க கால சிறுகதைகளிலும், நாவல்களிலும் தொன்மக் கதைகளை படைப்புகளில் பயன்படுத்துவது வழக்கமாக இருந்தது. அது போல பழங்கதையும், புராண, இதிகாரப் பாத்திரங்களையும் தம் படைப்புகளில் பயன்படுத்துவதும் அதனை மறுவாசிப்புச் செய்வதும் காணப்பட்டது. தொன்மங்களை மறுவாசிப்புச் செய்வதன் வழியாக புனிதங்களைக் கட்டுடைத்தல் என்னும் செயலும் கூறப்படுகிறது. நாவல்களிலும், சிறுகதைகளிலும், பழமரபுக் கதைகள், புனிதத்துவம் சார்ந்த கதைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவையாவும் தொன்மக்கதைகளே ஆகும். தமிழிலக்கியப் பரப்பில் தொன்மங்களைப் பயன்படுத்தும் முறை மாறிக் கொண்டே வந்தாலும் கதைகளில் அவற்றை ஊடிழையாகப் பயன்படுத்தினர். கார்க்கியும் நாட்டுப்புறக் கதைகளை வைத்து அழகான சிறுகதைகளைப் படைத்தார். புதுமைப் பித்தனும் அகலிகை கதை உட்ப பல தொன்மங்களைத் தன் எழுத்தாற்றலால் மறுபடைப்பு செய்து தன் புதிய சிந்தனைகளை மரபுமயப்படுத்தினார். இது போலவே சங்க இலக்கியத்தில்

ஒரு முலை இழந்த திருமாவுண்ணி, இளங்கோ கையில் வணிக குலத்தின் எழுச்சியைக் கூறும் கற்புக்கரசியாக வளரவில்லையா? “அதே கண்ணகி நாயக்கர் காலத்தில் புகழேந்தி கையில் மதுரை சொக்கநாதனை வணங்கிக் கொண்டு பணத்திற்கு அலையும் மாதவியிடம் சண்டைக்குப் போகும் சக்களத்தியாகப் போய் விடவில்லையா....”[4] என்று தொன்மக் கதைகள் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமையைப் பற்றிக் கூறுகிறார் க. பஞ்சாங்கம். புதுமைப் பித்தனுக்குப் பின்னர் பல்வேறு எழுத்தாளர்கள் தம் கதைகளில் பழமரபுக் கதைகளையும், மதம் சார்ந்த கடவுளர் கதைகளையும் தம் படைப்புக்களில் எழுதியுள்ளனர். மறுவாசிப்புக் கதைகளையும் இயற்றியுள்ளனர். மகாபாரதக் கதையினை எஸ். ராமகிருஷ்ணன் உபபாண்டம் என்றும், இந்திரா பார்த்தசாரதி, பிரபஞ்சன் ஆகியோர் மகாபாரதம் என்ற பெயரிலும் எழுதினர். பூமணி கொம்மை என்றும் லட்சுமணப் பெருமாள் துரியோதனனை நாயகனாகக் கொண்டு சிறுகதையும் எழுதினர். மறுவாசிப்புக்கான நாவல்களாக மிளிர்கல், கொற்றவை ஆகியன சிலப்பதிகாரத்தைப் பற்றியனவாக அமைந்தன. அ. முத்துலிங்கம் ஒரு சிறுகதையில் குந்திதேவி ஐவருக்கு மனைவி என்பதனை தனக்கு மட்டுமானதாக இருப்பதாகக் கருதி சூழ்ச்சி செய்து வில் வித்தையில் வென்ற அர்ச்சுனன் தான் கொண்டு வந்ததை ஐவரும் பங்கிட்டுக் கொள்க என்று கூறி திரௌபதிக்கும் ஐந்து கணவர்கள் ஏற்படச் செய்தாள் என்னும் நோக்கில் எழுதினார். அக்கதையில் “சிறு பெண்ணாக இருந்த போது குந்தி சூரியனை வேண்டி கர்ப்பம் திறந்து கர்ணனைப் பெற்றாள். உலகறிய சுயம்வர மண்டபத்தில் பாண்டுவுக்கு மாலையிட்டாள். சதஸ்சிருங்க வனத்தில் பாண்டுவின் ஆணைப்படி மூன்று தேவர்களை வரித்து பிள்ளைகளைப் பெற்றாள். எல்லாமாக அவளுக்கு ஐந்து புருஷர்கள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு குந்தி யுதிஷ்டிரனுக்குப் பதில் கூறினாள். “என் குமாரர்களே பிட்சை கொண்டு வந்திருக்கிறீர்களா வழக்கம் போல் ஐவரும் பங்கு போட்டுக் கொள்ளுங்கள். தாயாருடைய வாக்கை தேவவாக்காக எடுத்துக் கொள்ளும் பாண்டவர் ஐவரும் திரௌபதியைத் தங்கள் மனைவியாக ஏற்றுக் கொண்டனர். குந்தி தன் மனத்திற்குள்ளே மெல்ல நகைத்துக் கொண்டாள். இனிமேல் அவளை யாரும் ஓர் அவச் சொல் சொல்லப் போவதில்லை”[5] என்ற கதைப் பகுதி குந்திதேவியின் தந்திரம் எனக் கூறப்படுகிறது. இது ஒரு மறுவாசிப்புக் கதையாகக் கொள்ளலாம். இவ்வாறு பல்வேறு எழுத்தாளர்கள் பழங்கதைகளையும் சமயம் சார்ந்த பல்வேறு கடவுளர்களையும் மனிதனோடு இணைத்தும் கதைகளில் கூறியுள்ளனர்.

இனவரைவியல் நாவல்களும் தொன்மங்களும்

தமிழ் நாவல்களின் போக்குகளில் ஒன்றாக வட்டார இலக்கியங்கள் தோன்றின. அவை இனவரைவியல் கூறுகளை மிகுதியாகக் கொண்டு அமைந்தன. இனவரைவியல் ஆய்வாளனின் பணியினைச் செய்யக் கூடியவர்களாக படைப்பாளர்கள் மாறினர்.

புனைவான இலக்கியத்தினுள் படைப்பாளி தன் வாழ்ந்த சமூகத்தின் இனக் கூறுகளை உட்பொதிந்து எழுதினர் என்பதை அறியமுடிகிறது. கி. ராஜநாராயணனின் படைப்புகளில் இத்தகைய இனக்கூறுகள் மிகுதியாக இருப்பதைக் காணலாம். தொன்மங்கள் சமயம் சார்ந்த கடவுளர் கதைகளாகவும் கடவுளர் தோற்றக் கதைகளாகவும், மனிதப் பிறப்புக் கதைகளாகவும், மனிதன் - கடவுள் இணைப்புக்கதைகளாகவும், இயற்கை இகந்த ஆற்றல் கதைகளாகவும் நாவல்களில் காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து நவீன இலக்கியங்கள் வரை இத்தகைய பண்புகள் கொண்ட கதைகள் இலக்கியங்களில் கூறப்பட்டு வருகின்றன. இனவரைவியில் நாவல்களாகச் சுட்டப்படுகின்ற வட்டார நாவல்களில் மக்களிடம் புழங்குகின்ற இத்தகைய கதைகளை படைப்பாளர் அப்படியே புனைவாக்கம் செய்கிறார். ஓர் இனக்குழுவுக்கும் கடவுளுக்கும் தொடர்பு இருப்பது போல் கூறப்படுவது அவர்களது குல தெய்வங்கள் குறித்துக் கூறும் போது அவை தொன்மங்களாக வழிவழியாக அவர்களிடம் வழங்கி வருகின்ற கதைகளாகவோ பாத்திரங்கள் புனைவாக்கம் செய்வதாகவோ அமைகின்றன. அவை ஒரு வகையில் வரலாறாக இருந்து கதைகளாக மாறியவை. கதைகளாகும் போது அதில் புனைவாக்கம் மிகுதியாகி மீவியல் தன்மைகளும் சேர்ந்து விடுகின்றன. “எழுதப்பட்ட வரலாற்றில் எழுதப்படாத மக்களும் சமூகங்களும் உள்ளன. எந்த ஒன்றுக்கும் இரண்டு முகங்கள் உண்டு. கட்டபொம்மன் நல்லவன் என்றும் அல்லவன் என்றும் கூறும் உள்ளூர் வரலாறுகள் நம்மிடமுண்டு. இராவணனும் அசுரர்களும் அரக்கர்களும் அல்லவர்கள் என்ற படிமம் நமக்குள் ஏற்றப்பட்டு விட்டது”[6] என்று பழமையான வரலாறுகளில் உள்ள பன்மைத் தன்மையினை எடுத்துரைக்கிறார் பக்தவத்சலபாரதி. தொன்மங்கள் இது போன்ற மறுவாசிப்புத் தன்மை கொண்டவை, பண்பாட்டு மீறலைக் கொண்டவை என்பதையே இவ்வாறு கூறுகிறார் எனலாம். தமிழ் இனவரைவியல் நாவல்களில் படைப்பாளர்கள் பலரும் இத்தகைய வரலாற்றுத் தன்மையான தூய தொன்மக் கதைகளையும் புனைவாக்கம் மிகுதியாக தொன்மக்கதைகளையும் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

அஞ்ஞாடி நாவலில் தொன்மக் கதைகள்

இனவரைவியில் சார்ந்து அமைந்த அஞ்ஞாடி நாவலானது பெரும்பான்மையும் நாடார், மறவர், நாயக்கர் ஆகியோரின் வரலாறுகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. ஒடுக்கப்பட்டோரான ஆண்டி, மாரி ஆகியோரின் நட்பும் அவர்களிடையே பகிரப்படும் கதைகளும் தொன்மக்கதைக்குச் சான்றாகத் திகழ்கின்றன. ஆண்டியிடம் மாரி கூறும் கதைகள் யாவும் மாய யதார்த்தவாதத் தன்மை கொண்ட மீவியல் ஆற்றல்களைக் கொண்ட கதைகளாக விளங்குகின்றன. சாமி வேட்டைக்குச் செல்லும் காட்சியை விவரிக்கும் மாரி பிறர் வியப்படையக் கூறுவதாக அமைகிறது. “பொழுதடையுற நேரந்தான் சாமி வேட்டைக்குக் கிளம்பும் அப்ப பாக்கணுமே ‘எப்படி இருக்கும்’ ‘ஒரு

நாயி தகதகன்னு நாக்க நீட்டிக்கிட்டு பறந்து வரும். நாக்கு மேல தோரணையா சாமி நிக்கும் கையில பெரிய கம்பு முள்ளு முள்ளா இருக்கும். சாமிக்கு ஒரே கண்ணு. அதுல பளிச் பளிச்சுன்னு வெளிச்சம் மின்னும் தலையை அங்கிட்டும் இங்குட்டும் திருப்பயில வெளிச்சம் நம்ம மேல படாம ஒளிஞ்சிக்கனும்' 'ஏன் அப்படி' 'பட்டுச்சுன்னா எரிஞ்சு சாம்பலாயிடுவோம்' 'கோவத்துல கால உதறுச்சுன்னா தண்ட ரெண்டும் இடி விழுந்த மாதிரி குலுங்கும்.' 'அடே அறிவிருக்கா உனக்கு' 'இரையெடுக்குற நேரத்துல எதுக்க வரலாமா ஓடு ஓடுன்னு ஒரு அரட்டு அம்புட்டுத்தான் ஒரே ஓட்டம் வீட்டுக்கு வந்து முத்தத்துல நின்னு அருவங்க கேட்டா நாயி மூச்சு லேசா எறஞ்சிக்கிட்டே இருக்கும். சலுக்கு சலுக்குன்னு சலங்க சத்தம் கேட்கும் அத நெனச்சா பகல்ல கூட பெயந்து கெடக்கும்" (அஞ்ஞாடி, ப.4.) எனும் கதையில் சாமி வேட்டைக்குப் போகும் கதை கூறப்படுகிறது. இக்கதையில் நாய், அதன் தோற்றம், கடவுளின் கையில் ஈர்க்கும் கம்பு, ஈட்டி, கண்ணின் ஒளி, நாயின் நாக்கு ஆகியன மீவியல் தன்மையுடன் கூறப்படுவதைக் காணலாம். இதே போல ஆண்டியிடம் மாரி கூறும் கதைகளில் பல நம்பிக்கைகள் காணப்படுகின்றன. தண்ணிப் பேயி என்னும் தலைப்பில் அமைந்த அத்தியாயத்தில் தீயைக் கக்கும் பேய்கள் பற்றிக் கூறப்படுகிறது. தீ எரிவதைப் பார்த்து உயிர்ப்பிராணிகள் அனைத்தும் அஞ்சுகின்றன. அங்கு சென்று தீயை அணைக்க வேண்டுமென அனைத்தும் பேசுவதாகவும் மாரி, தான் உதவி செய்வதாகவும் கூறி மலைக்குச் சென்று விடுகிறான். கழுதையின் மேல் ஏறி பறந்து சென்றதாகவோ, முனி தூக்கிச் சென்றதாகவோ, முனியின் வாகனமான நாய் கொண்டு சென்றதாகவோ கூறுகிறான். அது எதுவென்று தெரியவில்லை எனக் கூறிவிட்டு விவரிக்கும் செய்திகள் யாவும் கேட்பதற்கு வியப்பைத் தரும்படி இருக்கின்றன. பேய் தீக் கிணறுகளிலிருந்து விளையாடுவதாகவும், ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமென இருப்பதாகக் கூறுகிறான். ரத்தம் வடிய அதைக் குடிப்பதாகவும், பாறைகளை நாக்கால் நீட்டி தோண்டியெடுத்து உருட்டுவதாகவும் அஞ்சாங்கல் விளையாடுவதாகவும் கூறுகின்றான். அக்கதையில் "இந்நேரம் வெள்ளம் எங்க போயிருக்குமேன்னு பதட்டமாருக்கு. முனியசாமியப்பா என்னயக் கொண்டு வந்து இங்க ஏன் தவிக்கவுடுற. எங்க ஊரக் காப்பாத்துன்னு கும்பிட்டுக்கிட்டே இருக்கேன். கொஞ்ச நேரத்துல ஆரோ தக்னு குதிக்கிற சத்தம் கேக்குது. ஆராது, தண்ணிப் பேயி எங்க முனியசாமி அனுப்பி வச்சது. குதிச்சதும் கும்மாளம் போட்ட பேயிகளப் பாத்து மொறச்சது. வாய அகலமாத் தொறந்து மூச்சு இழுத்துச்சு. வாயிக்குள்ள பாத்தா பெரிய கம்மாயே தண்ணி நெறஞ்சு கெடக்குது. ஏய்னு ஒரு அரட்டு அம்புட்டுத்தான் ஆட்டம் அடங்கிருச்சு. பேயிக பரிஞ்சு போன எடந்தெரியல. எல்லாத்துக்கும் பெரிய பேய் போலருக்கு.... பெறகு மலைக மேல தூ தூ ன்னு துப்புச்சு ஒடனே தீ எரிஞ்ச எடம் அம்புட்டும் அமந்து போச்சு. நின்ன எடத்துலருந்தே நாக்க நீளமா நீட்டி நம்ம ஊருணியப் பாத்துப் போற வெள்ளத்த மறிச்சு ஒரே மூச்சுல அவ்வளவையும் குடிச்சிட்டு வகுத்தத் தடவிக்கிட்டே மாயமா மறஞ்சு போயிருச்சு." (அஞ்ஞாடி, பக்.10-11) என்று மாரியின்

கதையானது ஆண்டியை வியப்படைய வைப்பதாக அமைகிறது. அதன் பின்னும் மாரியை விலங்குகள் அனைத்தும் கொண்டாட்டமாக இருப்பதாகக் கூறுகிறான். "ரெண்டு மலவவ்வா எனக்கு மேல செறகால கொடபுடிக்குது. மானு என்ன சொகமாப் பாடுது தெரியுமா, சிங்கமும் கரடியும் அதுக்கு ஈடுகுடுக்க முடியல. ஒரே கரகரப்பு. நரியப் போல மனுசனுங் கூட ஆட முடியாது. ஆனைக கொப்புக் கொழைய ஒடிச்சு வழி உண்டாக்கிட்டுப் போகுது. மலம்பண்ணி, இருக்கே அது மொரட்டுக் கழுத. ஒரு சிலுப்புத்தான். கோடாலி மாதிரி இருக்கிற சிங்கப் பல்லு எதுப்பட்ட மரங்கள வேரோட தெண்டிச் சாச்சிரும்" (அஞ்ஞாடி, ப.11) என்று நடைமுறையில் நடவாதவற்றை நடந்ததாகக் கூறும் வழக்கத்தினை உடையவனாக மாரி காணப்படுகிறான். அவனது கதைகள் யாவும் கட்டுக்கதைகளாக அமைந்துள்ளன. ஆண்டி அவனது இந்தக் கதைகளுக்காகவே சேர்ந்து திரிகிறான் எனக் கூறப்படுகிறது.

மாரியின் கதைகளில் ஒன்று நிலவிற்கு கழுதையின் மேல் ஏறிச் சென்று அங்குள்ள புல்லைமேய்ந்து சாணி போட்டதும், பால் கறந்ததும் ஆகும். இந்தக் கதையில் நிலவைப் பார்த்து விட்டு அங்கு தன் தந்தை பால் கறப்பதாகவும் கூறுகிறான். கழுதையை இரவில் அவனை உசுப்பும் என்றும் அதனோடு நிலவுக்குச் சென்ற கதையை விவரிக்கும் போது ஆண்டி அவனை நம்பாமல் பார்ப்பதும் அதை நம்ப வைப்பதற்காக மேலும் கதையில் சுவாரசியத்தைக் கூட்டுவதும் மாரியின் வழக்கமாக இருந்தது. "நான் சொன்னா நம்ப மாட்டீங்க சமுத்திரமில்லாம மழை எங்கிருந்து வரும் ஒரு நாளைக்கு வந்து பாருங்க. சமுத்திரம் வந்திருச்சா அதக் கடக்கணுமே. தாளியத் தண்ணியில மல்லாக்க மெதக்க விட்டு அதுக்குள்ள பத்திரமா உக்காந்துக்கிருவேன். கழுத என்னை முட்டித் தள்ளிட்டே நீஞ்சு வரும் செத்த நேரத்துல அக்கரைக்குப் போய் சேந்துருவோம். அங்கருந்து மேல போனா மேகத்துக்கு மேகமா அடஞ்சு கெடக்கும். வெளுத்தத் துணிய குமிச்ச மாதிரி அதுகள வெளக்கி வழி உண்டாக்கி எப்பப் போய் சேர்றது. கழுத சீத்துன்னு ஒரு மூச்சு விடும் அவ்வளவுதான் மேகம் கந்து கந்தாக கலைஞ்சு ஓடிடும். சரி மேகத்தக் கடந்தாச்சு. அதுக்கடுத்து என்னருக்கு தெரியுமா - என்னதான் - அடே அப்பா அதப் பார்க்க ஆயிரங் கண்ணு வேணும். தரிசுக் காட்டுல ஆடு மாடு மேயுமே அப்படி கட்டாணியுங்களுக்காணியுமா கணக்கில்லாம நடமாடும் வந்துக்கிட்டும் போய்க்கிட்டும் உருண்டுக்கிட்டும் சுத்திக்கிட்டும் சிறிசுக சிறுவானஞ் சுத்திக்கிட்டும் பெருசுகளாகவும் சுத்தி வெளயாடுது. நவ்வாப்பழம்போல ஒரு கூட்டம். தேங்காய் தேங்காயா ஒருகூட்டம். பூசணிப் பழமா ஒரு மந்தை அலையும் சில்லுனு பருத்தி வெடிச்ச மாதிரி கண்டபடி வெள்ளி மொளச்சுக்கெடக்கும். நாங்க போற வழியில எதுவுங் குறுக்க வந்துச்சுன்னா வையிங்க கழுத ஒரு ஒத குடுக்கும் அதோட கத முடிஞ்சது. சுக்கு சுக்கா ஒடஞ்சு செதறிப் போகும். எல்லாந் தாண்டி நிலவுக்குப் போய் இறங்கி தவிப்பாறுவோம்" (அஞ்ஞாடி, ப.38) என்று நிலவுக்கு கழுதையில் போவதைப்

பற்றியும் போகும் வழியெல்லாம் காணும் காட்சியைப் பற்றியும் தத்ரூபமாக எடுத்துக் சொல்கிறான் மாரி. நிலவைப் பற்றியும் அதில் உள்ளவற்றைப் பற்றி மாரி அளக்கும் கதைகளை ஆச்சரியத்துடன் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் ஆண்டி அவன் கூறும் கதையில் நிலவில் போய் தண்ணீர் குடித்ததாகக் கூறுவதைப் பற்றிக் கேள்வி கேட்கிறான் "ஏலே பொடிமசுரு என்னயத் தாண்டிப் போயிருவயோ.... கழுதக் கத அம்புட்டுத்தானா. தண்ணிதான் பனியா ஒறஞ்சுகெடக்குதுன்னயே கழுதைக்கு மட்டும் எங்கிருந்து ஊத்து வந்துச்சு" (அஞ்ஞாடி, ப.39) என்று கேட்கிறான். மாரியும் சளைக்காமல் கதையை அவிழ்த்து விடுகிறான் "அதச் சொல்ல மறந்துட்டனே. கழுத பனிக்கட்டியிட்டப் போயி ரெண்டு தேரம் மூச்சுவுடும். அந்தச் சூட்ல பனி உருகித் தண்ணியாயிரும். வெதுவெதுன்னு தண்ணி குடிச்சதும் அதுக்குக் குட்டி நெனப்பு வந்துரும். உடனே அளவில்லாமப் பாலு சொரக்கும். நான் ஓடிப் போயி தாழிய ஏந்துவேன். பாலு சொர்ன்னு எறங்கி நெறஞ்சிரும். அதத் தலையில சொமந்துக்கிட்டு மறுபடியும் கழுதமேல ஏறிக்கிருவேன். ஒரு வீச்சுல குறுக்கு வழியா வீடு வந்து சேந்துருவோம்" (அஞ்ஞாடி, ப.39) என்று தன்னையும் தன் கழுதையையும் இரவில் மட்டும் வானத்துக்குப் பறந்து செல்லும் ஆற்றல் கொண்டவர்களாக ஆண்டியை நம்ப வைக்கிறான். இது கதையென்றாலும் தர்க்க முறைப்படி கூறப்படுவதாக அமைகிறது. மீவியல் தன்மைகளை தாம் கொண்டிருப்பது பற்றி அவனுக்கு எவ்வித அச்சமோ, தயக்கமோ இல்லாமல் கதை சொல்கிறான். இக்கதைகள் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகிறது. முதலில் நிலவு என்பது ஒரு துணைக்கோள் என்பதும் வானிலிருந்துதான் பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது, எனவே மேலே கடல் இருப்பது உண்மை என நம்புவதற்கு ஏதுவாக அமைகிறது. நிலவின் அமைப்பைப் பற்றிய சித்திரப்பு என்பது இலக்கிய உலகினைக் குறித்த ஒரு சிந்தனை எனவும் கொள்ளலாம். மாய யதார்த்தவாத கதைகளில் இது போன்ற மீவியல் தன்மையும் உலகிற்கு அப்பால் உள்ள உலகு பற்றிய சிந்தனையும் காணப்படுகிறது. அது போலான தன்மையில் நண்பர்கள் இருவர் தமக்குள் பரிமாறிக் கொள்ளும் கதையை நாவலில் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். நம்புவதற்கு ஏற்புடையதாக இல்லை என்றாலும் புனைவில் இது இயல்பான ஒன்றாகக் காணப்படுகிறது. மேலும் பல கதைகள் மாரியினால் ஆண்டிக்குச் சொல்லப்படுகிறது. அக்கதைகளில் ஊர் விலங்குகள், பறவைகள், சிற்றினங்கள் இயல்பாக இடம் பெறுகின்றன. மனிதர்களும் பிற உயிர்களும் பரஸ்பர பிணைப்பில் வாழ்கின்றன.

நிலவு தேய்வதும் வளர்வதும் ஏன் என்று கேட்கும் கேள்விக்கு மாரி பதில் சொல்கிறான். கொக்கன்தான் அவனிடம் கேள்வி கேட்கிறான். "இனியென்ன வச்சிருக்க - கரையான் அரிச்ச மாதிரி நெலா கொஞ்ச நாளைக்குத் தேஞ்சுக்கிட்டே போகுதே அது ஏன் தெரியுமா? - எதுக்கு - பில்லுப் பூண்டு வளர்ந்து மூடிக்கிட்டே வரும். மொத்தமா

மூடிச்சிருச்சுன்னா நெல வெள்ளியிட்டத் தகவலு சொல்லியனுப்பும். ஒடனே பெறப்பட்டுப் போயிருவொம். கழுத மேய மேய நெலா சுத்தமாகி முழுசாத் தெரியும். இதெல்லாம் ஆருட்டயும் சொல்லப்படாதுன்னு எங்கிட்டக் கழுதப் பாலுமேல சத்தியம் வாங்கியிருக்கு. சங்கதி தெரிஞ்சு போச்சுன்னா அங்க கண்டமானக்கிக் கூட்டங் கூடிச் சாணிசகதின்னு அசிங்கமாயிருமில்ல. ஆனா ஒன்னு அந்தப் பில்லக் கழுதயாலதான் கடிக்க முடியும். ஆடுமாடுகளால ஒரு துரும்பக் கூட கடிக்க முடியாது. பல்லு அம்புட்டும் ஒடஞ்சு போகும்" (அஞ்ஞாடி, ப.39) என்று கூறுகிறான். மாரியின் கதைகளில் தொன்மச் சாயல் தென்படுவதற்குக் காரணம் வழிவழியாக கதைகூறும் மரபில் இது போன்ற தம்மால் இயலாததை கதையில் நிகழ்த்திக் காட்டும் வழக்கம் காணப்படுகிறது.

அருந்ததியப் பெண்ணின் தொன்மக் கதை

ஆண்டியிடம் மாரி கூறுகிற கதைகள் நம்ப முடியாததாக இருந்தாலும் அவனிடம் கதை கேட்பதைத் தவிர்க்க முடியவில்லை. ஏதேனும் கதை கூற அவனிடம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அருந்ததியப் பெண் வீரியின் கதையை மாரி கூறுகிறான். மேற்கு கெழவங்கோட்டை என்ற ஊரில் ஆட்சி புரிந்த அரசனின் மகனுக்கும் காட்டுக்குள் வாழ்ந்து வந்த சக்கிலியக் குடிப் பெண்ணுக்கும் இடையே காதல் ஏற்பட்டு விடுகிறது. இளவரசன் வேட்டைக்குச் சென்ற போது அங்கு தாகத்திற்கு ஒரு வீட்டில் குடிக்கத் தண்ணீர் கேட்கிறான். அந்த வீட்டினுள் இருந்து வந்தவள்தான் வீரி. அழகுப் பதுமையாக இருந்தாள். அவள் மேல் சின்ன ராசாவுக்கு மையல் ஏற்பட்டு விடுகிறது. அவள் தண்ணீர் எடுத்து வருவதற்குள் வீட்டிற்குள் நுழைந்து விடுகிறான். அவளையும் தன்னருகே அழைத்து உட்கார வைத்துக் கொள்கிறான். நாள்தோறும் அவளைக் காண வருவதற்காக வேட்டைக்குக் கிளம்பி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். யாரிடமும் கூறாமல் கூட அவளைப் பார்க்க வந்து செல்கிறான். அவளுக்குள் சிறிது சிறிதாக அவன் மேல் விருப்பம் ஏற்படுகிறது. அங்குள்ள சக்கிலியக் குடியினர் இதனால் அச்சம் கொள்கின்றனர். வீரிக்கு நான்கு அண்ணன்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு இவளுடைய காதல் விசயம் தெரிந்து விடுகிறது. பெரிய ராசாவுக்குத் தெரிந்தால் தம் குடும்பத்தை பூண்டோடு ஒழித்து விடுவார் என்று கருதி சின்னராசாவை வரவிடாமல் தடுப்பதற்காக மாட்டை அறுத்து அதன் கறியை அரிந்து காயப் போடுவது போல் தொங்க விடுகின்றனர். அதைப் பார்த்தாவது அவ்விடத்திற்கு வர தயங்குவார் என்று கருதுகின்றனர். ஆனால் இளவரசன் அதை விலக்கி விட்டு உள்ளே செல்கிறான். தங்கையால் தாம் மிகவும் பாதிக்கப்படுவோம் என்று கருதிய அண்ணன்கள் அவளைக்கொன்று விட்டு ஊரை விட்டுப் போய் விடுகின்றனர். வீரியைக் காணாமல் தவித்த சின்னராசா அவள் ஒரு பொந்துக்குள் இறந்து கிடப்பதைப் பார்த்து தானும் கழுத்தை அறுத்துக் கொண்டு இறந்து விடுகிறான். பின்பு விசயம் தெரிந்த ராசா முன்னரே தெரிந்தால் இவருவரையும் சேர்த்து வைத்திருப்பேனே என்று வருந்துகிறார்.

வீரியின் அண்ணன்களை அழைத்து தன் அரணமனையில் வைத்துக் கொள்கிறாள் தனது வாரிசாக அவர்களின் குழந்தைகளில் ஒருவனைத் தேர்வு செய்கிறார். வீரியையும் ராசாவையும் இணைத்து சிற்பம் செய்து அதனை வணங்கி வருகிறார்கள். வாரிசுகள் என்கிறது கிளைக்கதை. மாரி தானும் அந்தக் கோயிலுக்குச் சென்று கும்பிட்டு வந்ததாகக் கூறுகிறான். இதையெல்லாம் தனக்கு ஒரு கழுகு கூறியதாகக் கூறுகிறான். "அது சரியே இதெல்லாம் அந்தக் கழுகுக்கு எப்படித் தெரியுமாம்" (அஞ்ஞாடி, ப. 49) என்று ஆண்டி கேட்கிறான். அதற்கு மாரி "கேட்டேனே. நாந்தான் வீரின்னு சொல்லுச்சு - வீரியா - கஞ்சிப் பான ஒடஞ்சது போல எம் மனசு ஒடஞ்சு போச்சு அது அழுக நான் அழுக என்னத்தச் சொல்றது" (அஞ்ஞாடி, ப.49) என்று கூறுகிறான். கழுகாக ராசாவும் வீரியும் சேர்ந்து வாழ்ந்து வந்தனர் என்றும் ஒருநாள் ராசா கழுகைக் காணவில்லை என்றும் அவனது நினைவில் கோயிலேயே வீரிக்கழுகு காலத்தைப் போக்குவதாகவும் கூறுகிறான். இது போன்ற கதைகள் சொல்கதைகளாக மக்களிடம் காணப்படுபவையாகும். நடைபெற்றிருக்கச் சாத்தியமுள்ள ஒரு நிகழ்ச்சியின் மீது புனைவுகளை இணைத்துக் கதையாகக் கூறி வருவது வழக்கமாகும். இச்சொல்கதைகள் புனைவு பிறிதொரு தளத்திற்கு கொண்டு செல்கின்றன. வேறுபட்ட இனங்களை இணைக்கின்றன. ஏற்றத்தாழ்வுகளை மறுக்கின்றன. தொன்மம் கதையாடல்களுக்குள் மற்றமையின் இடத்தை உறுதிப்படுத்துகிறது.

பழமரபும் முனிக்கதையும்

கிராமங்களில் பெரியவர்கள் தம் அனுபவத்தில் முனி, பேய் இவற்றைக் கண்டதாகக் கூறவதுண்டு. அவ்வாறு கூறுவதற்குச் சான்றுகள் இல்லாவிட்டாலும் அவர்கள் அதனைத் தம் ஆற்றலுடன் இணைத்துக் கூறுவது வழக்கமாகும். அஞ்ஞாடி நாவலிலும் மாரி ஆண்டியிடம் முனிக் கதையொன்றைக் கூறுகிறான். அக்கதையில் ஆண், பெண் முனிகளின் உருவங்களைப் பற்றிய விவரிப்பு வெளிப்படுகிறது. இரவில் தனக்கு உறக்கம் வராமல் வெளியில் வந்த போது வாகைமரத்தில் சலங்கை சத்தம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து அரிவாளை எடுத்துக் கொண்டு சென்று பார்த்ததாகவும் வாகை மரம் குலுங்கி நெற்று கீழே விழுவதாகவும் பிற மரங்களில் ஒரு அசைவும் இல்லை என்றும் கூறுகிறான். கிணற்றிலிருந்து முனி தெலா இறைத்ததைப் பற்றிக் கூறுகிறான். "ஒரு பாத்தியில உக்காந்து கெணத்தப் பாத்தா தெலா எறவ மும்மரமா நடக்குது - ஆராம் - வேற ஆரு முனிதான் - அத் தாயிளி - அது எம்பக்கம் திரும்பிப் பாக்கயில அப்படியே பம்மிப் படுத்துக்கிட்டென். பொழுதப் போல ஒரே கண்ணுதான். எங்க முனியசாமி மாதிரி. பம்மிக்கிட்டே வெட்டருவாள இறுக்கிப் பிடிச்சுக்கிட்டேன் - பெறகென்னாச்சு - நெலத்துக்கள்ள திரும்பிப் பாத்தா இனியொரு கண்ணு அந்தரத்துல மினுங்குது. அது வேறயா - ஆம்பள முனி தெலா எறைக்க பொம்பள முனி தண்ணி பாச்சுது. அதுகளோட புள்ளீக வாகமரத்துல வெளையாடுதுக -

குடும்பத்தோட வந்துருக்காக - என்ன மாதிரி வெளயாட்டுத் தெரியுமா - வாகமரத்துல போயி காக்காக் குஞ்சியா வெளயாட முடியும். கொப்பு தாங்காதே - தகப்பனோட தலமுடிய கொப்புக்குக் கொப்பு தோரணங் கட்டி அதுல நடந்து வெளயாடுதுக. ஒண்ணு தெலா மரத்துல கெட்டி ஏலட்டம் போடுது. சந்தோஷத்துல தங்குதங்குன்னு குதிக்குதுக. மரமே ஒடிஞ்சு போற மாதிரி. காச்சாம்பூச்சாம்னு பாட்டுப்படிக்குதுக. அது நமக்கே புரியுது" (அஞ்ஞாடி, ப.71) என்று கதை சொல்கிறான். தான் இரவில் பார்த்த முனியைப் பற்றிய இந்த விவரணை அனுபவத்தில் தாம் உணர்ந்தது போலவே கூறுவதை கிராமங்களில் இன்றும் காணலாம். ஆண்டி தன்னிடம் முனியை காட்டினாயா என்று கேட்க அதற்கு மாரி "நான் என்ன செய்யட்டும். அது வரங் குடுக்கலயே. வரங்குடுத்துருச்சுன்னு வச்சுக்க. சாமி மட்டுமில்ல முனி, பேயி எல்லாத்தையும் காட்டீருவேன்" (அஞ்ஞாடி, ப.72) என்று தான் கூறும் கதைக்கு பிறர் அறிந்து விடுவதற்குத் தடை போடுவது போல சிலவற்றையும் சேர்த்துக் கூறி விடுகிறான். இது போன்ற கதைகளைக் கேட்பவர்கள் அதை நம்புவதற்காகச் செய்யும் செயல்களில் ஒன்றாக இதனைக் காணலாம். ஆண்டிக்கு மாரியின் நினைவுகள் அவன் இறந்த பின்பும் மேலெழுந்து வருகிறது. வயலில் மரத்தோரம் சாய்ந்து படுத்தவன் கனவில் மாரி அப்போதும் தன் பராக்கிரம கதையை அவிழ்த்து விடுகிறான். தான் தண்ணீருக்குள் வசிப்பதாகவும் ஆமையை வாகனமாகப் பயன்படுத்துவதாகவும் கூறுகிறான். தண்ணீருக்கடியில் வீடுகட்டி வாழ்வதாகவும் சுவராக நத்தை ஓடுகளைக் கொண்டு இருப்பதாகவும் கூறுகிறான். கழுதையைப் போல ஆமையும் அவனுக்கு நல்ல வாகனமாக இருப்பதாகக் கூறுகிறான். "ஆம முதுகுல லேசாத் தட்டுவென். ஒடனே தண்ணிக்கு மேல வந்து மெதக்கும். நான் சவாரி வச்சபடியே அண்ணாந்து பார்ப்பேன். அடேயப்பா கருவ மரத்துல எத்தன பட்சிக இருக்கும் தெரியுமா? இத்தன வகதானு கணக்கில்ல. கலப்பக்குத்தி, பன்னருவா, கம்பரக்கத்தி, செரப்பி கலக்குச்சு மாதிரி அழகு தாறுமாறா கோணிக் கெடக்கும். ஒவ்வொன்னும் வாயில பழங்கள் வச்சிக்கிட்டு எனக்காகக் காத்திருக்கும். நான் மனசுக்குப் பிடிச்ச பழத்துக்காக கை நீட்டுவேன். மேலிருந்து பழம் விழும். நாலு பழம் தின்னாப் போதும். வகுறு நெறஞ்சிரும். ஆமைக்கும் குடுப்பேன். கெழுடி வெத்தல இடிச்ச மாதிரி அது நமட்டி நமட்டி விழுங்குறதுக்குள்ள விடிஞ்சு போயிரும்" (அஞ்ஞாடி, ப.77) என்று ஆமையின் மேல் தான் சவாரி செய்வதை மாரி கூறுவதாக ஆண்டி கனவில் காண்கிறான். இது போன்ற மீவியல் தன்மையுள்ள கதைகளே தம் மனத்தின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கூறப்படுகிற கதைகள் எனலாம்.

சாதியத் தோற்றத் தொன்மம்

ஒவ்வொரு சாதிக்கும் அச்சாதியின் தோற்றத் தொன்மக் கதைகள் அச்சமூகத்தினரிடம் கூறப்பட்டு வருவதுண்டு. அது போன்ற கதைகளை அஞ்ஞாடி

நாவலில் ஆண்டியின் மனைவி அறிந்ததைத் தன்னிடம் கதை கேட்க வரும் பிள்ளைகளுக்குக் கூறுவதாக அமைகிறது. பறவைகள் பழத்தைத் தின்று கழிக்கும் எச்சத்தில் இருந்து பல்வேறு மரங்கள் முளைப்பது போல சாதியினரும் பல்வேறு இடங்களில் பரவியிருக்கின்றனர் என்று கூறுகிறாள். தேவேந்திரர் வகுப்பினர் குறித்த அவளது கதையானது "நெல்ல வகைய எண்ணுனாலும் பள்ளு வகைய எண்ண முடியாது. அத்தன வகையிருக்குதா நம்ம ஆரு பேத்தி - பெத்த தாய நம்ம அஞ்ஞைஞன்னு கூப்பிடுறதால அஞ்ஞாப் பள்ளரு - ஆத்தான்னு கூப்பிடுறவுக ஆத்தாள் பள்ளரு, அம்மாங்கிறவுக அம்மாப் பள்ளரு - அவ்வளவுதானா - பெறகு நண்டுதின்னி, நத்தத் தின்னி, ஈசலு தின்னி, மொறம்பொத்தி - மொறம்பொத்தின்னா - பொட்டி சொளகப் பொல்லாம் பொத்துறவு - அப்படியா - இனினும் எத்தனையோ இருக்கு...ஸ்.. அஞ்ஞாடி" (அஞ்ஞாடி, ப.93) என்று கூறுகிறாள். அத்தோடு சிவன், பார்வதியின் மூலமாக தேவேந்திரர் வகுப்பினர் தோன்றிய கதையையும் கூறுகிறாள். படியளப்பதற்காக பூலோகத்திற்குச் செல்ல வேண்டுமென பார்வதி கூற சிவனுக்கும் அது சரியென்று படுகிறது. சிவன் முகத்தில் அரும்பாக வந்த வியர்வையை துடைத்து சுண்டி விட அது வாய்க்கால் தண்ணீரோடு சென்று வள்ளிக் கொடியிலையில் தங்கி குழந்தையாயிற்று. அதைப் பார்வதி எடுத்து தேவேந்திரனிடம் கொடுத்து ஒரு காராம்பசுவையும் தருகிறாள். அவன் வளர்ந்து அந்த பசுவின் பாலைக் கறந்து மூன்று காம்பு பாலை சிவன், பார்வதி, தேவேந்திரனுக்கும் ஒரு காம்பில்தானும் பால் குடித்தான். அவன் அங்குள்ள நிலங்களை சீர்செய்து விதைத்து அறுவடை செய்வதில் வல்லவனாகத் திகழ்ந்தான். அப்போது பூலோகத்தில் அவன் விதைத்து அறுவடை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவனை பூலோகம் அனுப்புகிறார்கள். சிவனின் மகனானவன் பள்ளங்களைச் சீர் செய்து அங்குள்ள ஆசாரியிடம் உழ வேண்டும் எனக் கூறி ஏர் செய்து வாங்கிக் கொண்டான். சிவனிடம் உழுவதற்கு காளைகள் வேண்டும் என்று கேட்க அவரும் மயிலை, செவலை, புல்லை என்று மாடுகளை அனுப்பி வைக்க அவை இரண்டு காளைகளை ஈன்றன. அவற்றைக் கொண்டு விவசாயம் செய்வதற்கானத் தொழி செய்தான். நாற்று நட பெண்கள் வேண்டுமெனக் கேட்கவும் சிவபெருமான் மேலோகத்திலிருந்து பெண்களை அனுப்பி வைத்தார். அவர்கள் நடவுத் தொழியில் நட்டுக் கொண்டிருக்கும் போது இரண்டு பேருக்கு மட்டும் நாற்று முடியை கூடுதலாகப் போட்டு விட்டான். அவர்கள் நடவில் பின்தங்க மற்றவர்கள் மேலோகம் சென்று விட்டனர். அவர்கள் மேல் அவனுக்கு விருப்பம் இருப்பதைத் தெரிந்து சிவபெருமான் இருவரையும் அவனுக்கே திருமணம் செய்து வைத்தனர். அந்தப் பெண்களுக்கும் குழந்தைகள் பிறந்தனர். நிலத்தில் அனுதினமும் வேலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கும் போது அவனை மேலோகத்திற்குக் கூட்டிச் சென்று விட வேண்டும் என இருவரும் திட்டமிடுகின்றனர். அவனது வீட்டில் சாராயம், கறி ஆகியனவற்றை வைத்து ராசாவிடம் புகார் செய்கின்றனர். ராசா தன் படை வீரர்களை வைத்து

சோதனையிட்ட போது அங்கு பூக்கள் இருந்தன. இதனால் கோபம் கொண்டவன் மேலோகத்திற்குச் சென்று விடுகிறான். பின்பு குடும்பம் என்றால் சண்டை சச்சரவு இல்லாமல் இருக்காது என்று கூறி சமாதானம் செய்து அனுப்பி வைக்க அன்றிலிருந்து தேவேந்திரன் குடும்பம் என்று பூமியில் பல்கி பெருகி வாழ்ந்து வருகின்றனர் என்று கூறி முடிக்கிறாள் கருப்பி. (அஞ்ஞாடி, பக்.93-98).

பேய்க்கதைகளும் முனிக்கதைகளும்

இறந்து போன கிழவன் முனியாவ வந்து, ஆடு மேய்க்கும் தன் பேரக் குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதாக அமையும் வழக்குக் கூறப்படுகிறது. சிறு வயதில் இறந்து போன பெண், குடும்பம் நடத்த ஆசைப்பட்டுத் தன் குலத் தெய்வத்திடம்; வேண்ட, அவரும் குடும்பம் நடத்த வரம் கொடுத்தார். அதன்படியே அவள் ஒரு இளைஞனைத் திருமணம் செய்து கொண்டாள். பேயாக அலைந்தவளுக்குக் குடும்பத்திற்குள் வாழ்வது சிறை வாழ்க்கை போலத் தெரிகிறது. நினைத்த இடத்திற்குப் பறந்து போக முடியவில்லை. கண்டதைச் சாப்பிடமுடியவில்லை என்ற வருத்தம் இருக்கிறது. எனவே கணவன் வேலைக்குச் சென்றதும் அவனுக்கு உணவு கொடுத்து விட்டு வந்து வீட்டில் பேயாக மாறி இளைப்பாறுகிறாள். இது தெரியாத அவளது கணவன் அவள் எங்கு செல்கிறாள் என்று அறிந்து கொள்ள அவள் பின்னாலேயே வந்து வீட்டில் இருக்கும் அவளது நிலையைப் பார்த்து மிகவும் அதிர்ச்சியடைகிறான். அவனைக் கண்டு அவள் பேசினாலும் அவன் அச்சம் கொண்டு ஒரு சாமியாரிடம் சென்று தன் மனைவியின் கோலம் பற்றிக் கூறுகிறான். பேயுடன் குடும்பம் நடத்தியிருப்பதாகக் கூறுகிறார் சாமியார். அதைக் கேட்டு அவன் ஊரை விட்டு ஓடிப் போய் விட்டான். அவன் எங்கு சென்றான் எனத் தெரியவில்லை. அந்தப் பேயும் அவனைத் தேடி ஆட்டுக்காரா, மாட்டுக்காரா என் வீட்டுக்காரனைப் பார்த்தாயா எனக் கேட்பதை வழக்கமாக்கிக் கொண்டாள். பெண் தனது இயல்பிற்கு அப்பாற்பட்டு நிலை எடுக்கும் ஆற்றல் பெற்றவள் என்பதாகத் தொன்மம் சொல்லப்படுகிறது. இது போன்ற எண்ணற்றக் கதைகளை அஞ்ஞாடி நாவல் கொண்டிருக்கிறது.

முடிவுரை

தொன்மம் என்பது பழமரபுக் கதைகளை வழிவழியாக வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. நடந்த நிகழ்ச்சியின் மீது கட்டப்படுகிறது புனைவாகவும் கொள்ளலாம். வரலாற்றில் நிகழ்ந்தனவற்றின் மீது மீவியல் தன்மையையும், கடவுள், பேய், முனி ஆகியனவற்றுடனும் தொடர்பு கொண்ட மனிதர்கள் தம் துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொள்வது போல அமைப்பதாகும். பறவைகள், விலங்குகள் ஆகியனவும் இது போன்ற கதைகளில் மனிதர்களோடு பேசவும், நினைத்த உரு எடுக்கவுமான புனைவுகள் காணப்படுகின்றன. தெய்வத் தோற்றக் கதைகள், சடங்கு தோற்றம், வழக்குத் தோற்றம்

ஆகியனவற்றிற்குக் கூறப்படும் கதைகளில், கடவுள் தொடர்புடையனவாக அமைவது இயல்பாக இருக்கிறது. சொல் கதைகளாகவும், கட்டுக்கதைகளாகவும் கூட தொன்மக்கதைகள் காணப்படுகின்றன. தொன்மக் கதைகளை இனக்குழுக்களின் பழக்க வழக்கங்கள், குலதெய்வத்தின் ஆற்றல், இறந்தோர் ஆன்மா சாந்தியடைதல் பற்றிய தொன்மங்கள் கூறப்படுகின்றன. அஞ்ஞாடி நாவலில் தேவேந்திரர்களின் வாழ்வில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மீவியல் நிகழ்ச்சிகள், மேரி மாதா காட்சி தருதல், மந்திர ஆற்றலால் உருவங்கள் மாறிப் போதல் என்பன போன்றவை கூறப்படுகின்றன. அஞ்ஞாடி நாவலில் தேவேந்திரரின் சமூகத்தினரின் சாதி தோற்றக் கதைகள் யதார்த்தமாக அமைந்துள்ளன. மாரி, ஆண்டிக்குக் கூறும் கட்டுக்கதைகள், பேய், முனிக் கதைகள் எனப் பல நிலைகளில், தொன்மக் கதைககள் விரவிக் கிடக்கின்றன. இக்கதைகள் மனிதர்களையும் கானுயிர்களையும் பிணைக்கின்றன. மனிதர்களையும் கடவுள்களையும் தொடர்புறுத்துகின்றன. இயற்கையோடு மானுடம் இயைந்து வாழவேண்டியதன் அவசியத்தைப் பறைசாற்றுகின்றன. பூமணி தனது இனவியல் சார்ந்த தொன்மங்களைத் தனது கூட்டு நனவிலியிலிருந்து பொதிந்தடுக்கிறார். அஞ்ஞாடி நாவலில் வரும்; பல்வேறு தொன்மக் கதைகள் நாவலிற்குப் பெரும் பலம் சேர்க்கின்றன.

முதன்மை நூல்

பூமணி, அஞ்ஞாடி, 2015, க்ரியா பதிப்பகம், சென்னை - 600 041.

அடிக்குறிப்புகள்

1. ப. மருதநாயகம், 2019, மேலைத் திறனாய்வு அணுகுமுறைகள், ப.285, சாரதா பதிப்பகம், சென்னை.
2. அப்துல்ரகுமான், 2016, புதுக்கவிதையில் குறியீடு, ப.70, அகரம், தஞ்சாவூர் - 613 007.
3. க. பஞ்சாங்கம், 2011, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.152. அகரம் பதிப்பகம், தஞ்சாவூர் - 613 007.
4. க. பஞ்சாங்கம், 2011, க. கஞ்சாங்கம் கட்டுரைகள் - 1 - நவீன இலக்கியக் கோட்பாடுகள், ப.529. காவ்யா, சென்னை
5. அ. முத்துலிங்கம், 2008, அ. முத்துலிங்கம் சிறுகதைகள் - 1, ப.409, தமிழினி, சென்னை.
6. பக்தவத்சலபாரதி, 2019, கி. ராவின் கரிசல் பயணம், ப.87, அடையாளம், புத்தாநத்தம்.

REFERENCES

1. P. Marudanayakam, 2019, Approaches to Critical Review, p.285, Sarada Publishing House, Chennai.
2. Abdulraguman, 2016, Code on Pudukavitha, p.70, Akaram, Thanjavur - 613 007.
3. K. Panchangam, 2011, Literature and Critical Theory, p.152. Akaram Publishing House, Thanjavur -613 007.
4. K. Panchangam, 2011, K. Panchangam Essays -1 - Modern Literary Principles, p.529. Kavya, Chennai
5. A. Muthulingam, 2008, A.Muthulingam Short Stories -1, p.409, Tamilini, Chennai.
6. Bhaktavatsalabharati, 2019, Kira's Journey to Karisal, p.87, ident., Buddhananantham..